1973 பிப்ரவரி 9]

திரு. கே. எ. வகாப் : இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கின்ற கான்ஸ்டபிள்களில் எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களும் பி. எ. படித்தவர்களும் இப்பொழுது கான்ஸ்டபிள்களாக இருக்கிறார்கள் என்று கூறினார்கள். பதவி உயர்வு வருகிறபொழுது, அப்படி அதிகமாகப் படித்தவர்களுக்கு முன்சலுகை அளிக்கப்படுமா? அதன் மூலம் எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்கள் பாதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு பொன்னப்ப நாடார் அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுதே கூறியிருக்கிறேன். பட்டதாரிகளாக இருந்தாலும், எஸ்.எஸ். எல். ஸி. படித்தவர்களாக இருந்தாலும், முதல்நிலைக் காவலர் தகுதியில் அமர்த்தப்படுகிறார்கள். அனைவரும் முதல்நிலைக் காவலர் தகுதியில் வரையறுக்கப்பட்டு நடத்தப்படுவார்கள்.

திரு. கோ. இளங்கோவன் : போலீஸ்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்குக் குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.ஸி. தகுதி இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : எஸ். எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இந்த நிலையைப் போக்குவதற்கு நம்முடைய அரசு இப்பொழுது ஃபர்ஸ்டு கிரேடு கான்ஸ்டபிள் நிலையை உண்டாக்கி இருக்கிறார்கள். இப்படி ஃபர்ஸ்டு கிரேடு கான்ஸ்டபிள் நியமனத்தின் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவு ஆகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த விவரம் இல்லை. அது சமர்ப்பிக்கப்பட இருக்கிற நிதிநிலை அறிக்கையிலே வரும்.

திரு. எம். முத்தையா : போலீஸ்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதம் என்ற முறையில் எடுக்கப்பட்டுள்ளதா ? அல்லது எந்த முறையில் எடுக்கப்பட்டுள்ளது என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தச் சலுகையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும்.

குற்றங்களைக் கண்டுபிடித்தல்.

*82. வினா திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையினர் குற்றவாளிகளென சந்தேகிக்கப்பட்டுகின்றவர்களிடமிருந்து உண்மையை வெளிக் கொணரப் பொறி இயல் சாதனங்களைப் பயன்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?